2007 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

மேல்நிலைப் பள்ளி

***3405—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் ஒரு மேல்நிலைப் பள்ளி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மானாமதுரையில் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறையின்மூலம் மேல்நிலைப் பள்ளி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், மானாமதுரை நகர்ப் பகுதியில் உள்ள மக்கள், ஏழையெளிய மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பகுதியிலே அரசு சம்பந்தமான எந்தவொரு மேல்நிலைப் பள்ளியும் இல்லை. எனவே, மானாமதுரையில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக ஒரு மேல்நிலைப் பள்ளி கட்டித் தரப்படுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் 6 பள்ளிகள்

செயல்பட்டு வருகின்றன. ஒரு மேல்நிலைப் பள்ளி, இரண்டு உயர்நிலைப் பள்ளிகள், 3 தொடக்கப் பள்ளிகள். சிவகங்கை ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, மல்லல் என்ற இடத்தில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் ப்ளஸ் 1, ப்ளஸ் 2 மாணவர்கள் 126; மாணவிகள் 98; ஆக மொத்தம் 224 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். குறிப்பாக, மானாமதுரையில் பள்ளிக் கல்வித் துறையின்மூலமாக அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியும், அரசு மானியம் பெறும் பள்ளி, ஒக்கூர் வெள்ளையன்பட்டி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியும் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு பள்ளிகளிலும், 2,223 மாணவிகளும், 1,594 மாணவர்களும் பயின்று வருகிறார்கள். எனவே, மானாமதுரையில் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறையின்மூலம் புதிதாகத் தனியாக மேல்நிலைப் பள்ளி அமைக்க வாய்ப்பில்லை.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரையில் அரசு மேல்நிலைப் பள்ளி கிடையாது. அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மட்டும்தான் இருக்கின்றது. மேலும், மானாமதுரை ஒன்றியத்திலேயே, வேம்பத்தூரில் மட்டும் அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கின்றது. மற்ற எந்த இடத்திலும், மேல்நிலைப் பள்ளி இல்லை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற 39 பஞ்சாயத்துக்களிலும் அதிகமான ஏழையெளிய மக்கள், தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்கு மானாமதுரைக்குத்தான் வரவேண்டும். அப்படி இருக்கின்ற நேரத்தில், அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், ஓ.வி.சி. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி என்ற ஒன்றும்தான் இருக்கின்றன. இட நெருக்கடியின் காரணமாக, பல பகுதிகளிலிருந்து வருகின்ற மாணவர்களுக்கு அந்தப் பள்ளிகளிலே படிப்பதற்கு வசதிகள் இல்லாத காரணத்தினால், அந்தப் பகுதியிலே ஓர் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி துவங்கினால் நல்லது. அந்தப் பகுதியிலே அரசு நிலங்களும் இருக்கின்றன. நல்ல குடிநீர் வசதியும் இருக்கின்றது. போக்குவரத்து வசதியும் இருக்கின்றது. எனவே, அரசு அந்தப் பகுதியிலே ஆதி திராவிடர் நலத் துறைமூலமாக, ஓர் அரசு மேல்நிலைப் பள்ளியைக் கட்டித் தருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2007 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாக புதிதாகப் பள்ளிகள் தொடங்குவதற்குத் தற்சமயம் ஏதும் செயற்குறிப்பு இல்லை. அப்பகுதியில் ஆய்வு செய்து, ஆதி திராவிட மாணவர்கள் மற்றும் மாணவிகள் அதிகமாக இருக்கும்பட்சத்தில் அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் வீடு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 56-ன்கீழ், (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரையும் கேட்பேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரையும் கேட்பேன், உட்காருங்கள். 5-4-2007 வியாழக்கிழமை நள்ளிரவில் ஒரத்தநாடு பேரூராட்சியிலுள்ள, தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்களுடைய வீடு, சில நபர்களால் அடித்து நொறுக்கப்பட்ட சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம், கே.ஏ. செங்கோட்டையன், டி. ஜெயக்குமார், ஆர். வைத்திலிங்கம், செ.ம. வேலுசாமி, எம்.வி.ஆர். வீரகபிலன், ஆர்.கே. பாரதி மோகன், இரா. துரைக்கண்ணு, அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அ.தி.மு.க. சார்பாகவும், ம.தி.மு.க. சார்பாக திரு. மு. கண்ணப்பன், திரு. நா. இராமகிருஷ்ணன் ஆகிய இரண்டு பேரும், விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாகப் பேசலாம். அ.தி.மு.க. சார்பாக திரு. ஆர். வைத்திலிங்கம்.